# THIRUMARAI AASAAN



**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385



**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 29 January - 2016 Issue - 1**


**ஆசிரியர் உரை**

## தவிர்த்திருக்க முடியும்

மனிதர்களாகிய நாம், இப்பூமியில் சிறப்பான வாழ்வு வாழ்வதற்குத் தேவையான அறிவும், ஆற்றலும் பரலோகத்தின் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதை நாம் முறையாகவும், முழுமையாகவும் பயன்படுத்தாதபோது, பல சமயங்களில் பிரச்சினைகளையும், தோல்விகளையும், சங்கடங்களையும், வேதனைகளையும், துக்கங்களையும் எதிர்கொள்ள வேண்டியதாகிவிடுகிறது. ஏன் இப்படியாயிற்று என்று அதற்கான காரணங்களை நாம் ஆற அமர்ந்து யோசித்துப் பார்க்கும் போது, ஒருவேளை நாம் அதைத் தவிர்த்திருக்கலாமோ அல்லது இதைத் தவிர்த்திருக்கலாமோ என்று சில நேரங்களில் எண்ணத் தோன்றுகிறது. இன்னும், சில சந்தர்ப்பங்களில், நாம் புத்தியாக நடந்திருந்தால் அந்த சோகத்தை, அல்லது அந்த நஷ்டத்தை கண்டிப்பாகத் தவிர்திருக்கலாமோ என்று அங்கலாய்க்கவும் செய்கிறோம். இப்படி நான் சிந்திக்கும்படியான நிலை என் வாழ்க்கையில் ஒரு போதும் வந்ததே கிடையாது என்று எந்த ஒரு மனிதனுமே சொல்ல முடியாதென்பதே உண்மை.

நம்முடைய செயல்பாடுகளை சீர்தூக்கிப் பார்த்து, அடடா, அதைத் தவிர்த்திருக்கலாமோ என்று எண்ணுவதைப் போலவே, நாம் மற்றவர்களின் காரியங்களையும் அதன் தன்மைக்கேற்றவாறு அணுகி, அவர்கள் அதைச் செய்திருக்கலாம் அல்லது இதைத் தவிர்த்திருக்கலாம் என்று கூறமுடியும். இதைச் செய்ய ஒருவனுக்கு ஒரு பெரிய மேதாவித்தனம் தேவையில்லை. பிரச்சினையின் தன்மையையும், அதன்

ஆழத்தையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் புரிந்து கொள்ளும் குறைந்தபட்ச அறிவிருந்தால் அதுவே போதுமானது.

இக்கருத்தினடிப்படையில்தான், நாம் ஒரு வாலிபனுடைய செயல்பாட்டை உற்றுப்பார்த்து, தீர்ப்புச் செய்ய உள்ளோம். அவன், பரிசுத்த வேதாகமத்தால் சிறப்பான அறிமுகம் பெறும் அளவுக்கு சிலாக்கியமானவன். மனத்தாழ்மையும், கொண்டவன். நல்லதைச் செய்ய வேண்டுமென்ற நினைப்பும், சிறந்ததைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற வாஞ்சையும் இருந்தது. எதை யாரிடம் கேட்க வேண்டுமென்ற தெளிவு பெற்றிருந்தான். சிறுவயது முதலே ஒழுக்க நெறியிலும், பக்தி முறையிலும் வளர்ந்தவன். எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசு கிறிஸ்துவை முகமுகமாய்ச் சந்தித்துப் பேசும் பாக்கியம் இவனுக்குக் கிடைத்தது.

இவ்வளவு சாதகமான அம்சங்கள் இவனுக்கிருந்தும், இவன் தனது வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், ''மனமடிந்து, துக்கப்பட்டிருக்கி றான்''. ஆனால், இவன் காரியங்களை நாம் உற்று நோக்கும் போது, இவன் அடைந்த துக்கத்தை கண்டிப்பாகத் ''தவிர்த்திருக்க முடியும்'' என்று நமக்கு பலமாகத் தோன்றுகிறது. நாம் இப்படி, முடிவு செய்வது சரி தான் என்பதற்கு ஆதாரமாக, இவனுக்கிருந்த சாதக நிலைகளை சற்று ஆராய்வோம்.

**முதலில், இவன் பற்றி வரும் வேத பகுதியை நாம் பார்ப்போம், ''பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, நல்ல போதகரே, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான்''. அதற்கு இயேசு : நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப் பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்.**

**அதற்கு அவன் போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக் கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்பு கூர்ந்து : உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு : நீ போய் உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு ; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்**

**கொண்டு, என்னைப் பின்பற்றி வா என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ள வனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான். ( மாற். 10 : 17-22 ).**

இப்பொழுது, அவனுக்கிருந்த சாதக நிலைகளைப் பார்ப்போம்.

### I *இயேசுவண்டை ஓடி வந்தான் :*

முதலாவது, இச் சம்பவம் இயேசுவின் ஊழிய நாட்களில் நடந்துள்ளது. அந்நாட்களில் அவர் மிகுந்த செல்வாக்குடன் காணப்பட்டார் என்பது உலகறிந்த ஒன்று. எப்பொழுதும், அவரைச் சுற்றி பெருங் கூட்டம் அலை மோதியது. ஆகவே, அச்சமயங்களில் அவர் கிட்ட் சேர்ந்து, அவரோடு பேச முயற்சிப்பது வீண் வேலை என்பது விளங் காத நன்றல்ல. அதுவும், அவர் புறப்பட்டுப் போகையில் என்று வசனம் கூறுகிறபடியால், அது இன்னும் சிரமமான காரியம். ஒருவேளை, ஓரிடத்தில் தங்கியிருக்கும் போதாகிலும் முயற்சித்துப் பார்க்கலாம். ஆனால், பிரயாணத்தில்? வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. ஆயினும், அவன் இயேசுவண்டை ஓடிவந்து, பேசியுள்ளதாக வேதம் கூறுகிறது.

அம்மனிதனின் இச்செயல், அவனுடைய உள்ளக் கிடக்கையை பளிச்சென வெளிப்படுத்துகிறது. அவன் வாஞ்சை வரம்பில்லாதது என்று காட்டுகிறது. அவனின் இச்செயல் மெச்சக்கூடியதாகவே உள்ளது.

நம்முடைய சமுதாயத்தில் உள்ள அநேகர் கிறிஸ்துவண்டை வர மறுக்கும் போது, வரத் தயங்கும் போது, வந்தவர்களும் கிறிஸ்துவை விட்டு விலகி ஓடும் போது, இவன் கிறிஸ்துவை நோக்கி ஓடி வந்துள் ளான். கிறிஸ்துவண்டை வந்து, தங்களுடைய சரீர வாழ்க்கையின் அநேக தேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவல நிலையிலுள்ளவர்களே கிறிஸ்துவண்டை வரப் பிடிவாதமாக மறுக்கும் போது, பூமியின் வாழ்க் கையில் சகலவற்றிலும் தன்னிறைவு பெற்று, சம்பூரண வாழ்க்கை வாழ்ந்த இவன் ஓடி வந்துள்ளான்.

ஆயினும், ஆவலோடு ஓடி வந்த இவன், இறுதியில் துக்கத்தோடே திரும்பிப் போனதைப் பார்க்கும் போது, துக்கத்தை இவன் தவிர்த்திருக்க முடியும் என்றே தோன்றுகிறது.

### II *மனத்தாழ்மையோடு தைரியத்தையும் காட்டினான்*

திரளான கூட்டம் முண்டியடித்த போதும், தனது முயற்சியில் தொய்வுகாட்டாமல், ஓடோடி வந்த இவன், இயேசுவுக்கு முன்பாக முழங்கால் படியிட்டுள்ளான். இவன், அவருக்கு முன்பாக முழுங்கால் படியிட்டது, இயேசுவின் மீது இவனுக்கிருந்த உயர்ந்த மரியாதையை

மாத்திரம் காட்டாமல், இவனின் முடங்கின முழங்கால், இன்னொன்றையும் கூறுகிறது. இயேசு, மரியாதைக்கு மாத்திரமல்ல, வணங்குவதற்கும் ஏற்றவர் என்னும் இவ்வுண்மையை அன்றைய நாளில் எத்தனை பேர் அறிந்திருந்தனர்?

இவன், அச்சமுதாயத்தின் பெரும் பணக்காரனாக இருந்துள்ளான். அத்தோடு, ஒரு தலைவனாகவும் இருந்துள்ளான் என்று லூக்கா ஆசிரியர் கூறுகிறார் ( லூக். 18 : 18 ). அதாவது, நிறைந்த வசதியோடு, அதிகாரமும் இவன் கையில் இருந்துள்ளது. ஒருவேளை, அன்றைய நாளில், இயேசுவைச் சுற்றியிருந்த ஏராளமான பேர்களில், அநேகர் இவனைக் காட்டிலும், பல காரியங்களில் தாழ்ந்தவர்களாக இருந்திருப்பர். இவனுடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவர்களாக இருந்திருப்பர். ஆனால், இவன் அதுபற்றி யெல்லாம் கிஞ்சித்தும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

யூதருக்குள் அதிகாரியாக இருந்த நிக்கொதேமு, பகலிலே இயேசுவைச் சந்திக்கப் பயந்து, இரவிலே வந்திருக்கும் போது ( யோவா. 3:1,2) இவன் பட்டப்பகலிலே, நடுரோட்டில் முழங்காலிட்டு சந்தித்துள்ளான். இதற்கு தாழ்மையோடு, அபாரத் துணிவும் வேண்டும். தலைவன் என்ற தன்னுடைய அந்தஸ்துக்கு குந்தகம் ஏற்பட்டு விடுமென்று இவன் ஒரு கணம் சிந்தித்திருந்தால், இவனால் இப்படிச் செய்திருக்க முடியாது.

இன்றைக்கு எத்தனையோ மக்கள், தாங்கள் எதிலுமே குறிப் பிடத்தக்கவர்களாக இல்லாதிருந்தும், தங்களுடைய தேவையில்லாத கௌரவத்தையும், வீண் பெருமைகளையும் கொஞ்சமும் தளர்த்துவ தில்லை. ஒருவேளை, தாங்கள் பணிபுரியும் இடங்களில், தங்களது வரு மானம் போய் விடுமே என்பதற்காக பணிந்து நடப்பது போல பாசாங்கு செய்தாலும், தேவனுடைய வேலையைச் செய்கிறவர்களென்று வரும் போது, அவர்களை முடிந்தவரை உதாசீனம் செய்து, அதில் ஒருவகை யான இன்பம் காண விரும்புகின்றனர். ஆனால், இந்தப் பெயர் தெரியாத வாலிபனோ, முற்றிலும் வேறுபட்டவனாகக் காட்சி தருகிறான்.

இந்தளவு, நற்குணம் இருந்தும், இவன் தன் முயற்சியில் தோற் றுப் போய், துக்கத்துடன் திரும்பினதைப் பார்க்கும் போது, இவன் அடைந்த துக்கத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்றே தோன்றுகிறது.

### III *அவன் பகுத்தறிவுள்ளவனாக இருந்தான்*

அறிவு என்பது கிட்டத்தட்ட எல்லா மனிதருக்குள்ளும் கொஞ்சம்

கூடக் குறைய இருந்தாலும், பகுத்தறியும் அறிவு எல்லோரிடமும் தேவையான அளவு இருப்பதில்லை. ஆனால், இந்த வாலிபன் ஓடி வந்து, முழங்காலிட்டுச் சொன்ன வார்த்தைகள் நல்ல போதகரே என்பது. நல்லவர் என்று ஒருவரை யாருமே எடுத்த எடுப்பில் சொல்லமாட் டார்கள். கணிசமான கால கவனிப்பிற்குப் பிறகோ அல்லது பல நாள் பழக்கத்திற்குப் பின்போ தான் இவ்வார்த்தையைப் பயன்படுத்த முடியும்.

இயேசுவின் நாட்களில், யூத மதப் போதகர்கள் அநேகர், பக்தியின் வேஷம் தரித்து, தங்களுடைய போதனை தான் உண்மையா னதென்று ஊரேல்லாம் உலா வந்து போதகம் செய்து கொண்டிருந்த நிலையில் இவனும் அவர்களைப் போல ஒரு முக்கியப் புள்ளியாக இருந்தபடியால், அவர்களின் போதனைகளுக்கு வக்காலத்து வாங்க வேண்டிய அவசியம் இருந்தும் கூட, அவைகளையெல்லாம் புறந் தள்ளி, இயேசுவின் போத னைகளோடு அவைகள் ஒப்பிடத்தக்கவை கள் அல்ல என்பதை மனப் பூர்வமாக அறிந்து வைத்திருந்தான். இதைச் செய்வதற்கு ஒருவனுக்குப் பகுத்தறியும் தன்மை அபாரமாக வேண்டும்.

நாம், கிறிஸ்தவ மத உலகைக் கவனிக்கும் போது, இந்தப் பகுத்தறிவுக்கு கடுமையான பஞ்சம் ஏற்பட்டுள்ளதென்பதை போகிற போக்கில் அறிந்து கொள்ள முடியும். அப்போஸ்தலனாகிய யூதா எழுதின நிருபத்தில், தேவனுடைய பிள்ளைகள் பகுத்தறிவுள்ளவர்க ளாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார். (யூதா. 22). ஆனால், கிறிஸ்தவமோ, பகுத்தறிவுக்கு நிரந்தரமான விடை கொடுத்துவிட்டு, தேவன் பெயரால் யார் என்ன சொன்னாலும், அதற்குக் கண்ணை மூடிக் கொண்டு, ஆமாம் சாமி போடுவதுதான் பக்திக்கு அடையாளம் என்று புது விளக்கம் கொடுக்கின்றது. இன்னும், முதியோரின் பேச்சுக்கு மரியாதை என்ற பெயரால், பெற்றோரும், மற்றோரும் சொல்வது தான் வேதவாக்கு என்று அநேக வாலிபர்கள், ஆன்மீக காரியங்களின் ஆழத் தை உணராமல், நாட்களை வீணடித்துக் கொண்டுள்ளனர். தங்களு டைய உலக அறிவை ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்துவது பாவம் என்று நினைக்கின்றனர். ஒருவேளை உண்மையைக் கண்டுபிடிக்க முயற்சித்து, அதன் விளைவாக, தேவ கோபத்திற்கு ஆளாகி விடுவோமோ என்று அஞ்சி நடுங்குகின்றனர். ஆனால், இந்த வாலிபன், இவ்விஷயத்திலும் வேறுபட்டவனாகவே இருந்துள்ளான்.

இவ்வளவு இருந்தும், தன் முயற்சியில், பரிதாபமான தோல் வியைச் சந்தித்து, துக்கத்தோடு திரும்பிப் போனதைப் பார்க்கும்போது அத்துக்கத்தை இவன் தவிர்த்திருக்க முடியும் என்றே எண்ணத்

தோன்றுகிறது.

## IV *ஆவிக்குரிய சிந்தையையும் பெற்றிருந்தான்*

இறுதியாக, இவனுக்குள்ளிருந்த மற்ற எல்லா சிறப்புகளையும் விடச் சிறந்ததொரு சிறப்பும் இவனிடம் இருந்தது. இக்குணம் பூமியின் வாழ்க்கையில் அரிதான ஒன்று. இவன் மிகுந்த செல்வந்தனாயிருந்து, தனது செல்வத்துக்கடுத்த காரியங்களில் நாட்டம் கொள்ள காரணங்கள் ஆயிரம் இருந்தும், அவைகளுக்கு மத்தியிலும், இவனுக்கு ஆவிக்குரிய சிந்தையும், ஆத்துமாவைக் குறித்த பாரமும், நித்திய ஜீவனைப் பற்றிய அக்கறையும் இருந்துள்ளது. இவனொரு, அசாதாரணமானவனே.

இவன் இயேசுவிடம் கேட்ட கேள்வி இதுதான். **நித்திய ஜீவனைக் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்**? என்று (10:17). இவன் இயேசுவண்டை ஓடி வந்த போது, திரளான கூட்டம் அவரை நெருக்கி நின்றது. ஆனால், அவர்களனை வரும் பூமியின் பாடுகள் சம்பந்தப்பட்ட விதவிதமான நோக்கங்களுக் காக அவரிடம் வந்திருந்தனர். வியாதியின் கொடுமைக்காகவும், பிசா சின் கட்டுகளுக்காகவும், இன்னும் பிற காரியங்களுக்காகவும் வந்திருந் தனர். ஆனால், இந்த வாலிபனோ, பூமியில் பிறந்த எல்லோரும் கட் டாயம் கேட்க வேண்டிய, ஓர் அர்த்தமுள்ள கேள்விக்காக இயேசுவிடம் வந்தான். இம்மையைப் பற்றியே அனைவரும் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், இவன் மறுமையைக் குறித்த கவலையோடு வந்துள்ள எவ்வளவு, சிறப்பான மனிதனாக இருந்துள்ளான் பாருங்கள்.

நம்முடைய நாட்களிலிருக்கும் சமுதாயத்தை அப்படியே கவ னித்துப் பார்த்தால், அதுவும் குறிப்பாக வாலிப சமுதாயத்தைக் கண் ணோக்கினால், நாம் பார்த்த இந்த வாலிபனைப் போல், ஒருவரை யாகிலும் கண்டுபிடிக்க முடியுமா? மாம்ச காரியங்களே பெரிதென்று மதி மயங்கித் திரிகின்றனர். அதுவும், செல்வமும், சமுதாய அந்தஸ் தும் ஒரு சேர இருந்துவிட்டால் சொல்லவே வேண்டாம். ஆன்மீகமா? அது ரூபாய்க்கு எத்தனை என்று கேட்பார்கள். ஆனால், இந்த வாலி பன் முற்றிலும், ஆம், முற்றிலும் வேறுபட்டவனாக இருந்துள்ளான்.

ஆனாலும், இவன் துக்கமடைந்தவனாகத் திரும்பிப் போனான் என்று கேள்விப்படும் போது, நமக்கே மிகுந்த துக்கம் ஏற்படுகிறது. இவன், கண்டிப்பாக, தனது துக்கத்தை தவிர்த்திருக்க முடியும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

சரி, இதுவரை நாம் கண்ட இந்த வாலிபனுடைய நற்குணங்

களைப் பார்க்கும்போது, இவன் இயேசுவிடம், **நீர் சொல்வதையெல்லாம் உடனே செய்கிறேன் ஆண்டவரே** என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால், இவனோ, துக்கத்தோடே திரும்பிப் போயுள்ளான். ஒருவேளை II கொரி, 7:9 ல் சொல்லியுள்ளது போல், இவன் துக்கம் மனந்திரும்புவதற்கேதுவான துக்கமாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால், இவனுடையதோ, வேறு வகையானது.

இருப்பினும், இந்த வாலிபனுடைய குணங்களை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது, ஆக இவனல்லவா பக்தன் என்று சொல்லும்படியாகவே இருக்கிறது.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நாம் பார்த்த இந்த வாலிபன், கிறிஸ்தவ உலகின் இன்றைய நிலையை அப்படியே பிரதிபலிப்பவனாக உள்ளான். பலர் அநேக நற்குணங்களோடு, இயேசுவண்டை வருகின்றனர். ஆயினும், நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு, நீங்கள் இதைச் செய்ய வேண்டுமென்று சொல்லும் போது, தங்களுக்கு லாபமாக இருக்கும் பல உலக காரியங்களினிமித்தம் சத்தமில்லாமல் திரும்பிப் போய் விடுகின்றனர்.

இந்த வாலிபனுக்கு செல்வம் ஒரு காரணமாக இருந்தது போல, அநேகருக்கு பதவி, பட்டம், புகழ், பாரம்பரியம், சமுதாய அந்தஸ்து, கல்வி, வேலை, வருமானம் போன்ற பல காரியங்கள் காரணங்களாக உள்ளன. இருப்பினும், அந்த வாலிபன் போலவே, நம்முடைய உண்மை ரூபத்தை மறைத்து, பக்தியின் வேடம் போட்டு சமுதாயத்தை கடைசி வரை ஏமாற்றி வருகிறோம். வெளியே பார்த்தால், ஆஹா, இவரா, எவ்வளவு ஆர்வம்! எவ்வளவு வாஞ்சை! என்ன தாகம்! என்ன தாழ்மை! எவ்வளவு பக்தி என்று சொல்வதைப் போல் வெளித் தோற்றம் உள்ளது.

ஆனால், அவர்களைச் சந்தித்து, அய்யா, அம்மா, நீங்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு இன்னின்னதைச் செய்ய வேண்டுமென வேதவசனம் கூறுகிறதென்று சொல்லும்போதுதான், அவர்கள் யாரென்று தெரிகிறது. இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் தான் இயேசுக்கிறிஸ்து இப்பூமிக்கு வந்தார் என்பதின் பொருள் என்னவென்று கூட அநேகருக்கு விளங்குவதில்லை. ( லூக். 19:10). அப்படிப்பட்டவர்களையெல்லாம் அணுகி, நீங்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள, இயேசு கட்டின அந்த ஒரு சபையை (மத். 16:18) அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்றும், நீங்கள் விசுவாசித்து ( மாற். 16:16) அறிக்கையிட்டு (ரோம. 10:9, 10), பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் (அப். 22:16) பெற வேண்டும் அப்பொழுது தான் இயேசு கட்டின அந்த ஒரு சபைக்குள்,

நீங்கள் சேர்க்கப்படுவீர்கள், அது தான் உங்கள் நித்தியத்தை உறுதி செய்யும் என்று சொல்லும்போது, அநேகர், அந்த வாலிபனைப் போலவே துக்கப்படுகின்றனர். சில நேரங்களில் கோபப்படவும் செய்கின்றனர். துக்கமோ, கோபமோ எதுவாக இருந்தாலும் அவை கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டியவைகளே.

அந்த வாலிபன் நிலையைப் போல் நம்முடைய நிலை இருக்க வேண்டாம். அவன் முழுங்காலை மடக்கினது நல்லது தான். ஆனால் அவன் தனது மனவிருப்பத்தை மடக்க விரும்பவில்லை. ஆகவே, பயனில்லாமல் போனது. அவன், இயேசுவை வணங்கத் தனது தலையைப் பக்தியோடு தாழ்த்தினான். ஆனால், தனது இருதயத்தின் நிலையைத் தாழ்த்தவில்லை. நம்மைப் போலவே நேரிடையாக இல்லாமல், மறைமுகமாக அவர் சித்தத்தை ஒதுக்கித் தள்ளினான். பயப்படுவது போல் பாவ்லா காட்டினானேயொழிய, கீழ்ப்படிய முற்றிலும் மறுத்துவிட்டான். பூமிக்குண்டானவைகளை விட்டுவிடாமலே, பரலோக காரியங்களுக்கு ஆசைப்பட்டான். இந்த ஜீவனுக்குண்டானவைகளை தூக்கியெறியாமல் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினான். அது முடியுமா? சொல்லுங்கள். ஒரு போதும் முடியாது. நாம் தேவனை ஏமாற்றவே முடியாது.

ஆகவே, அருமையானவர்களே, இப்புதிய ஆண்டுக்குள்ளாகப் பிரவேசித்திருக்கிற நாம், நமது ஆன்மீக வாழ்வில், வேடதாரிகளாக வாழ விரும்பாமல், தவிர்க்கப்பட வேண்டிய காரியங்களைச் சரியான நேரத்தில், தவிர்த்து, கீழ்ப்படிய வேண்டிய காரியங்களுக்கு எந்தத் தயக்கமுமில்லாமல் தைரியமாய் கீழ்ப்படிந்து, இயேசுவின் போதனைகளின்படி வாழ்ந்து நித்திய ஜீவனை சுதந்தரித்து கொள்வோமாக! ஆமென்.


**பெரம்பூர் கிறிஸ்துவின் சபையார் நடத்தும்**

## 30ம் வேதாகமக் கருத்தரங்கம்

நாள் : **26.1.2016 (செவ்வாய்கிழமை)**
( அரசு விடுமுறை நாட்கள் )

இடம் : **டான் பாஸ்கோ நர்சரி & பிரைமரி ஸ்கூல்**
MH ரோடு, பெரம்பூர். சென்னை.

தொடர்புக்கு : **சகோ. வில்லியம்ஸ்,** செல் : 99622 10708.

**அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.**

# ஏன் நாங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறோம்?

சகோ. J.C. சோட்

இப்போது, இங்கே அநேக காரியங்களை நாம் கவனிப்போம். முதலாவது, பேதுரு, கர்த்தர் ஜனங்களை அழைப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இதைக் கர்த்தர் எப்படி செய்கிறார்? தெசலோனிக்கேயா பட்டணத்திலிருக்கிற கிறிஸ்தவர்கள் பற்றி இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. ''**நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்**'' என்று (I தெசலோனிக்கே யர் 2:14 ). இதையே வேறு விதமாகச் சொன்னால், பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தினாலே அவர்கள் அழைப்பட்டிருந்தார்கள். அது என்ன சுவிசேஷம்? அது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றிய நற்செய்தியாயிருந்தது. மேலும், இரட்சிக்கப்பட கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலினால் சாத்தியமானது (I கொரிந்தியர் 15:1-4). அதுபோலவே, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமானால் நற்செய்தியின் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும். அடுத்ததாக, அந்த நிபந்தனைகள் முதலில் ஒருவர் கிறிஸ்து வை விசுவாசிக்க வேண்டும், ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். பிறகு, இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும் (ரோமர் 10:9, 10) கடைசியாக, ஒருவர் தன் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற ஞானஸ்நானம் பெறவேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. இவைகள் எல்லாமே அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பிரசங்கித்திருக்கிறார்கள். ஏறக் குறைய மூவாயிரம் பேர் விசுவாசிகளாகி இரட்சிக்கப்படவேறு ஏதாவது செய்ய வேண்டுமா என அறிய விரும்பினார்கள். அவர்கள் விசுவாசிகளாக தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்புப் பெற ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. சுவிசேஷ பிரசங்கத்தின் மூலமாக கர்த்தர் தமக்குக் கீழ்ப்படியும்படி அழைப்பு விடுத்திருந்தார். ஏற்கனவே, குறிப்பிட்டபடி ஏறக் குறைய மூவாயிரம் பேர் அந்த அழைப்புக்கு பதிலளித்து கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அங்கே கர்த்தர் தன்னுடைய பங்காக அவர்களை இரட்சித்துத் தம்முடைய சபையிலே சேர்த்தார் ( அப். 2:47).

இரண்டாவது, ஒருநாள் வரும் அதில் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று யோவேலினால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. பேதுருவும், அப்போஸ்தலர்களும் பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்களிடத்தில் இந்த தீர்க்கதரிசனம் அந்நாளில் நிறைவேறிற்று என்று சொன்னார்கள். அப்படியென்றால், அவர்கள் இரட்சிக்கப்படும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்றால் என்ன? அநேகர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதலும் ஜெபமும் சமம் என்று சொல்வார்கள். ஆனால், இரட்சிப்போடு சம்பந்தப்படுத்தி ஜெபம் எங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது? உண்மையாகவே, கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்ட பிறகு அல்லது கிறிஸ்துவில் விசுவாசிகளான பிறகு, அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அறிய விரும்பினார்கள். அவர்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு சொன்னார். ஏறக்குறைய மூவாயிரம் பேர் பேதுரு சொன்னதைச் செய்தார்கள் என்றும், இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தம்முடைய சபையில் சேர்த்தார் என்றும் வேதவசனங்கள் சொல்கிறது. எனவே, **கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்வதென்பது கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் குறிக்கிறது என்கிற முடிவுக்கு நாம் வருகிறோம்.** வேறு விதமாகச் சொன்னால், ஒருவரோ அல்லது அதற்கு மேலோ தமக்கு கீழ்ப்படிந்தால், அவர்களை இரட்சிப்பதாக கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் ( மாற்கு 16:15,16), எனவே, ஒருவர் கர்த்தருக்கு கீழ்ப்படியும் போது, தன்னுடைய கீழ்ப்படிதல் மூலமாகக் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, தன்னை இரட்சிக்கும்படியான தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி கர்த்தரிடம் வேண்டுகோள் விடுக்கிறார். அப்பொழுது அவர் அப்படி செய்கிறார்.

மூன்றாவது, ஒரு நாள் வரும் அப்பொழுது கர்த்தர் மாம்சமான யாவர் மேலும் தம் ஆவியை ஊற்றுவார் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது. அவர் அந்த வாக்குத்தத்தத்தை நிறை வேற்றியிருக்கிறார். அவர் தொடர்ந்து வாக்குதத்தத்தை நிறைவேற்றி வருகிறார். பெந்தெகொஸ்தே நாளிலே கர்த்தர் தம்முடைய ஆவியை ஊற்றினார். அல்லது பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலர்களை ஞானஸ்நானப்படுத்தினார் ; அப்போஸ்தலர்கள் மூலமாக, அவர்களுடைய பிரசங்கம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படியே கர்த்தருடைய வார்த்தையைப் பதிவு செய்ததின் மூலமாக முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படும்படி கர்த்தர் பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலர்களுக்கு ஞானஸ்

நானங்  கொடுத்தார். அப்போஸ்தலருடைய பிரசங் கத்தின் விளைவாக கர்த்தருக்குக் கீழ்படிந்தவர்களெல்லாம் இரட்சிக்கப்பட்டது மட்டுமின்றி, அவர்களுக்கு பரிசுத்த ஆவியும் கொடுக்கப்பட்டது. இது பெந்தகொஸ் தே நாளில் அங்கே இருந்தவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களுடைய பிள்ளைகளுக்கும் அல்லது வருங்கால சந்ததி யாருக்கும், தூரத்தில் இருந்தவர்களுக்கும் அதாவது, புறஜாதி மக்களுக்கும் கொடுக்கப் பட்டது. சிறிது காலத்திற்கு பின் புற ஜாதிகளும் தேவனாலும், யூதர் களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்பதை நிரூபிக்கும் பொருட்டு கொர்நேலியும், அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலர்களும் கொர்நேலியுவின் வீட்டாரும் பரி சுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை மாத்திரமின்றி, அத்தோடு அப் போஸ்தலர்கள் தங்கள் கைகளை யார் மீது வைக்கிறார்களோ அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்றுக் கொண்டார்கள். அப்போஸ் தலர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியின் அற்புத அடை யாளங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டார்கள். இது நம்முடைய காலம் வரை தொடர்ந்து வருகிறது. எனவே, கர்த்தர் தம்முடைய வாக்குதத்தங்களை நிறைவேற்றி யிருக்கிறார்; ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடைய வார்த்தை நிறைவேறி வருகிறது.

**வேறொரு சந்தர்ப்பத்தில் பவுல் ரோமர்களுக்கு , '' இந்த வார்த் தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக் கிறது என்றும் சொல்கிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே, என்னவென்றால், கர்த்தராகிய இயே சுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித் தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவா சித்தால் இரட்சிக்கப் படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாக் கப்படும், இரட்சிப்புண் டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை யென்று வேதம் சொல்கிறது, யூதனென்றும், கிரேக்கனென்றும் வித் தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். ஆத லால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளு கிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர் கள் எப்படி விசுவாசிப்பார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசே**

**ஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவை கள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும், சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூல மாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் ( ரோமர் 10:8-17 ) என்று எழுதியுள்ளார்.**

இந்த வசனப்பகுதியில் இதன் எழுத்தாளர், ஒருவர் இரட்சிக்கட் டப்படும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதை தயவு செய்து கவனியுங்கள். இப்படிச் சொல் வதின் பொருள் என்ன? வசனப்பகுதியின் பின்னணியை வைத்துப் பார்க்கும்போது, தேவனுடைய வார்ததை பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று பார்க்கிறோம், ஒருவர் அதைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து, கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டும். மனந்திரும்புதலும், ஞானஸ் நானமும் இங்கே குறிப்பாக சொல்லப்படவில்லை என்றாலும், தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதன் ஒரு பகுதியாகவும், கர்த்தரில் விசுவாசம் வைப்பதின் ஒரு பகுதியாகவும் இது உள்ளது.

இது அப்போஸ்தலர் புத்தகத்தில் பட்டியலிடப்பட்டிருக்கிற எல்லா மனமாற்ற சம்பவங்களிலும், இரட்சிப்போடு சம்பந்தமுடைய வேதாக மத்தின் பிற வசனப்பகுதிகளோடும் ஒத்துப்போகும்படியாகப் பின்பற்றப் பட வேண்டும். இங்கே கவனிக்கத்தக்கது என்னவென்றால், ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது தன்னை இரட்சிக்கும்படியான வாக்குத் தத்தத்தை கர்த்தர் நிறை வேற்றும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறார். நிச்சயமாகவே, கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றத் தவறுவதில்லை. பேதுரு இப்படிச் சொல்கிறார், '' **தாமதிக் கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார்** '' ( II பேதுரு 3:9 ).

இரட்சிப்பிற்காக நீங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு விட்டீர்களா? நாங்கள் இப்படிச் சொல்லும் போது ஜெபத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிவது சம்மந்தமாகப் பேசுகிறோம். தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக அவரைத் தொழுது கொண்டால், உங்களை இரட்சிப்பதன் மூலமாகவும், தம்முடைய சபையில் சேர்ப்பதன் மூலமாகவும் உங்களுக்கு அவர் பதிலளிப்பார். இரட்சிக்கப்படுவதற்கு இது தவிர வேறு வழி இல்லை. ●

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவ வாழ்க்கை பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை

சகோ. ரேச்சல் நாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! புத்தாண்டு வாழ்த்துக்களுடன் உங்களோடு கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்வதற்கு தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்கு அவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை என்பதினாலே ஏதோ முடியாத செயலைச் செய்ய வேண்டி நேரிடுமோ, நம்மை அந்நியப்படுத்திக் கொள்ள வேண்டுமோ, இது சாத்தியமா, அப்படி என்ன அது கட்டாயமா? என்றெல்லாம் எண்ணத் தோன்றும். அருமையானவர்களே! இது ஏதோ என்னுடைய வார்த்தை அல்ல, ஆலோசனையல்ல, பரலோகத்தின் தேவன் ஆதிமுதற்கொண்டு தன் மக்களிடம் கட்டளையாக, அக்கறையாக, எதிர்பார்ப்போடு சொன்ன வார்த்தை தான் தோற்றத்திலும், பண்பாட்டிலும், பார்வையிலும், பேச்சிலும் ஒருவரை அப்படியே பிரதிபலிப்பது என்பது பிரித்தெடுத்தல் என்பதைப் புரிந்து கொள்ள உதவி செய்யும். இதற்கு அருமையான சான்று நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்''(I கொரி ;11:1) என்று பவுல் கூறுவது. தொடர்ந்து செய்யும் பாவத்திலிருந்து நம்மை நாமே பிரித்து புனிதமான ஒன்றிற்காக தேவனுக்கு அர்ப்பணிப்பது பிரித்தெடுத்தல், அல்லது பிரிந்து வருதல்.

**I தீமோ: 1:13 ல் பார்க்கிறபடி;**

ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ அதுமுதல் ஒழுங்காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையாயிருக்க வேண்டும். நாம் பிறருக்கு வழிகாட்டுகிறவர்களாய் இருக்க வேண்டும். நமக்கு வேத வசனத்தை மாதிரியாய் வைத்துக் கொள்ள வேண்டும் II தெச :3:9 ல் பார்த்தால் நமக்காக நாம்தான் வேலை செய்ய வேண்டும் **உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்**

**பதினாலே அப்படிச் செய்யாமல் நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டு மென்றே அப்படிச் செய்தோம்.**

பரிசுத்தவான்கள் எல்லோரும் மாதிரியான வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுத்திருக்கிறார்கள் என்று பாருங்கள். உலகை விட்டு பிரிந்து வாழும் போதுதான் இதன் அர்த்தம் புரியும். I கொரி 4:3 ல் சுவிசேஷமானது கெட்டுப் போகிற வர்களுக்கு மறைபொருளாயிருக்கிறதென்று வாசிக்கிறோம். இப்பிர பஞ்சத்தின் தேவனாகிய பிசாசு சுவிசேஷத்தின் ஒளியைப் பார்க்கக் கூடாதபடி அவர்களுடைய கண்களை குருடாக்கினான் என்று. உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிதென்று அறிந்திருக்கிறோம் என்று I யோவான் 5:19-ல் வாசிக்கிறோம்.

அருமையானவர்களே நாம் வாழும் உலகம் இப்படியிருக்க நாம் பிரிந்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வது சாத்தியமா என்று நினைக்கிறீர்களா? வேண்டவே வேண்டாம். பரிசுத்த தேவ எழுத் துக்கள் பரிசுத்த வேதாகமத்தில் அருளப் பட்டுள்ளது. நம்மைப் போல பாடுள்ள மனிதர்கள்தான் பரிசுத்தமாயும், வசனத்தின்படியும் வாழ்ந் திருக்கிறார்கள் என்பதை வேதத்தில் படித்து தெரிந்து கொள்ள முடியும்.

அருமையானவர்களே! நாம் ஏன் இயேசுவை நோக்குவதில்லை நாம் படும் எல்லாப் பிரச்சனைகளையும் அனுபவித்த ஒருவர் இருப் பாரானால் அவர்தான் இயேசுகிறிஸ்து. பின் ஏன் அவரைத் தேடக் கூடாது? அவரைப் பற்றித் திட்டமாய் படித்துத் தெரிந்து கொள்ள ஏன் மனது இடம் கொடுப்பதில்லை? ஏன் பிறந்தார், ஏன் மரித்தார், ஏன் உயிர்த் தெழந்தார் என்பதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூட தெரிந்து கொள்ள நேரமுமில்லை, மனதும் இல்லை தேவையுமில்லை என்ற மெத்தனப் போக்கோடு வாழ்ந்து கொண்டுள்ளோமா? குடும்பம், உறவு, கல்வி, செல்வம், சொத்து, சுகம் இவைகள் நிரந்தரம் என்று எண்ணிக் கொண்டுள்ளோமா? பின் ஏன் இயேசுவின் காரியங்களில் அவரின் உபதேசங்களில் ஓர் அசட்டை! மன்னித்து விடுவார் என்று ஓர் பொய் சமாதானம் செய்து கொள்ளுகிறோமா?

அன்பான சகோதரிகளே! தேவனாகட்டும், நம் இரட்சகராகிய இயேசுவாகட்டும் அன்றிலிருந்து இன்றுவரை தன் பக்கம் நிற்பதற்கு ஆட்களைத் தேடுகிறார்கள். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்

அவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பதைச் செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.

மத்தேயு 7:13,14 வசனங்களின்படி இயேசுவுக்காக நாம் பிரிந்து வாழும் வாழ்க்கைப் பாதையானது இடுக்கமும், நெருக்கமுமானது தான். 21,23 வசனங்களில் பிதாவின் சித்தம் செய்யாதவர்களும் ஆகா, ஓகோ என்று பேசப்படுவார்கள். யோவான் 2:15-17-ல் உலகத்திலும் ,உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் என்று சொல்கிறார். ரோமர் 12:2: இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்க வேண்டாமென்று சொல்கிறார். நாம் உலத்தாராயிராதிருந்தால் உலகம் நம்மைப் பகைக்கும் (யோ:15:19) நாம் நேரத்தை கழிக்கும் விதம் (பே:4 :1-4), நாம் பேசும் பேச்சு (I யோவான் 4:4,5) இவைகள் யாவும் வேதம் எதிர்பார்க்கிறபடி இருக்க வேண்டும்.

நம்மை நேசித்துக் கொண்டேயிருக்கும் இயேசுகிறிஸ்து பிதாவை நோக்கி ஜெபித்தபோது யோவான் 17:15-ல் நீர் அவர்களை உலத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்கிறேன் என்று ஜெபித்தார். இவர்தான் இயேசு. நம்மீது உயிரையே வைத்திருக்க இயேசு அவரைப் பின்பற்றுபவர்கள் தீமை செய்யக் கூடாது என்பதில் எத்தனை அக்கறை எத்தனை பாரம். இந்த அன்பு இயேசுவுக்காக இந்தப் பாழும் உலகப் பழக்கவழக்கங்களில் இருந்து நாம் நம்மைப் பிரித்து வாழக் கற்றுக் கொள்ளக் கூடாதா?

அன்பான சகோதரிகளே! முழுமையான கிறிஸ்தவ வாழ்கை வேண்டுமென்பதற்காக நாம் சில பாடங்களைக் கற்றோம். மிகவும் அத்தியாவசியமான இக்கருத்துக்களை நம் வாழ்க்கையில் கடைப் பிடிப்போம்! தேவனும், இயேசுவும் அதற்கு உதவி செய்வார்கள் உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை (யாக் :4:4) நம் சிநேகம் யாரிடம் இருக்க வேண்டும்? சிந்திப்போம் இப்புதிய 2016-ம் வருடத்தில் ஸ்திரீகளாகிய நாம் மேலே வாசித்த வசனங்களை நம் வாழ்க்கையில் பயன்படுத்துவோம். இதன் மூலம் கிறிஸ்துவின் சபை நன்மையும், ஆசீர்வாதமும் பெறும். ஆமென்.

## பெண்களுக்கான மெய்யான அலங்காரம்

**அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.**

# சுவிசேசத்தின் ஆசீர்வாதங்கள்

சகோ. பென்னி மார்ட்டின்

**வா**லிபர்களாகிய உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள் ளுகிறேன். தேவனுடைய பெரிதான கிருபையால் புதிய வருடத்திற்குள் நாம் பிரவேசித்து சில வாரங்களை நகர்த்தியிருக்கிறோம். பல புத் தாண்டு தீர்மானங்களுடன் புதிய வருடத்திற்குள் புகுந்திருக்கிற நீங்கள் வெகு பாடுபட்டு அவைகளை நிறைவேற்றும்படியாய் உங்களை வேண்டிக் கொள்கிறேன். நம் வாழ்க்கையில் மலர்ந்திருப்பது புதிய வருடம் மட்டு மல்ல தேவனுடனான புதிய உறவும் தான். அதாவது, கடந்த வருடத்தில் தேவனோடு கொண்டிருந்த உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தால் அதை பரிசீலனை செய்து புதுப்பித்துக் கொண்டால் இவ்வருடத்தை தேவன் நன்மையால் முடிசூட்டுவார் ( சங்கீதம் 65:11 ). பிரியமான வாலிபர்களே! கடந்த வருடங்களில் தேவன் நமக்கு செய்த நன்மைகளுக்கு நாம் கடன்பட்டிருக்கிறோம், அக்கடனை நாம் எப்படி திருப்பிச் செலுத்தப் போகிறோம்? நம்மைச் சுற்றிலும் உள்ள கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு, பாவ இருளில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு மகிமையின் நம்பிக்கையாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவிப்பதன் மூலமாக நாம் அக்கடனை திரும்பசெலுத்த முடியும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பது ஒரு சுக மான அனுபவம்; எனவே, நாம் இப்போது சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைக காண்போம்.

## I. சுவிசேஷத்தின் மகத்துவம்

ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதால் பாவ மன்னிப்பைப் பெறுகிறார் '' **பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந் திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து வின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்**

**அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார்.** (அப். 2:38). இதை வேறு விதமாகச் சொன்னால், சுவிசேஷம் ஒருவரை இரட்சிக்கிறது, ஒருவருடைய பாவங்கள் முற்றிலுமாக கழுவப்பட்டு, புதிய வாழ்க்கையைத் தொடங்க, அது ஒருவரை புதிய மனித னாக்குகிறது சுவிசேஷத்தின் மூலமா கத்தான் ஒருவர் கிறிஸ்துவுக்குள் வருகிறார். கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம னைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? ( ரோமர் 6:3 ). நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக் கிறபடியால் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம். நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதினால் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் பிரவேசிக்கிறோம். I கொரிந்தியர் 12 ம் அதிகாரத்தில் அப்போஸ் தலனாகிய பவுல் கிறிஸ்துவின் சரீரத்தைப் பற்றி மிக விவரமாக எழுதியிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைதான் உலகத்திலுள்ள எல்லா அமைப்புகளை யும்விட பெரியதாயிருக்கிறது. ஆனால் அந்த அமைப்பில் அங்கத் தினராகும் வாய்ப்பை சுவிசேஷம் நமக்கு ஏற்படுத்தித் தருகிறது. கிறிஸ்து கட்டின சபையை யாராலும் அழிக்க முடியாது; அது என்றென்றும் நிலைத்து நிற்கும். மேலும், சுவிசே ஷந்தான் நம்மை தேவனுடைய பிள்ளைகளாக்குகிறது. அதனால் தான் நாம் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். பிரியமானவர்களே, இவ்வுலகிலே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் எதுவும் இருக்க முடியாது. இதைப் பற்றி நீங்கள் சற்று சிந்தித்துப்பாருங்கள்.

அடுத்ததாக, சுவிசேஷம் நமக்குத் தேவனை ஆராதிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது (யோவான் 4:23,24). வாரத்தின் முதல் நாள் தோறும் நாம் தேவனை ஆராதிக்கும்படி கூடும் போது தேவனுடைய ஜனங்களோடு ஐக்கியப்படுகிறோம், இதுவும் ஒர் ஆசீர் வாதமாகும். சபைகூடி வருதலை நாம் ஒரு வேலையாக, ஒரு பாரமாக எண்ணாமல் அதை ஒரு சிலாக்கிமாகக் கருத வேண்டும். நாம் அப்படிச் செய்யும்போது கர்த்தர் தாமே நம் கனத்திற்குரிய விருந்தினராக இருப்பதாக வாக்குத்தத்தம் செய்கிறார். '' **ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடி யிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் '' என்றார் ( மத்தேயு 18:20 ).**

II. **சுவிசேஷத்தின் தாக்கம்**

சுவிசேஷம் நம் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை

ஏற்படுத்தியிருக்கிறது. சுவிசேஷம் இல்லையென்றால் நாம் இன்னும் பாவத்தின் அடிமைத்தனத்தில் தான் இருந்திருப்போம். சுவிசேஷம் மொழி, இனம், நிறம் போன்றவைகளைக்கடந்தது. இன்று கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த நாமனைவரும் ஒரே குடும்பமாக இருக் கிறோம். உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் சகோ தர, சகோதரிகளாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நமக்கு சக கிறிஸ்தவர்களுடைய உதவியும், உற்சாகமும் அவசியப்படுகிறது. சுவி சேஷத்தினால் நாம் ஜெபிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். ஏனென்றால், தேவன் எல்லோருக்கும் செவிக்கொடுப்பதில்லையே. வேத வசனம் ''**பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லை ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்கு சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார் என்று சொல்கிறது** (யோவான் 9:31). வேறுவிதமாகச் சொன்னால் ஜெபமானது தேவனுடைய பிள்ளைகளுக்கானது; ஆயினும், இந்த ஜெபம் தேவனுடைய சித்தத்தின் படி இருக்கவேண்டும், அப்போதுதான் அது கேட்கப்படும். தேவன் தமது வார்த்தைகளின் மூலமாக நம்மிடம் பேசுகிறார்; நாம் அவரிடம் ஜெபத்தின் மூலமாகவே பேச முடியும். எனவே, நமக்கு ஜெபம் மிகப் பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது. இந்த உலகத்தின் மக்களோடு நம்முடைய எல்லாப் பிரச்சனைகளையும், இன்னல்களையும் பகிர்ந்து கொள்ள முடியாது. அப்படியே பகிர்ந்து கொண்டாலும், நமக்கு முன்பாக பரிதாபப்படுவதுபோலிருந்தாலும் நம்முடைய முதுகுக்குப் பின்னால் ஏளனம் செய்வார்கள். ஆனால் தேவனைப் பொறுத்தவரை எப்படிபட்ட பிரச்சனையாக இருந்தாலும் எத்தனை முறையானாலும் அவரிடத்தில் தெரியப்படுத்தும்போது அவைகளுக்கு தீர்வை ஏற்படுத்துகிறார். நமக்கு இரக்கம் பாராட்டி, பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து நம்மை விடுவிக்கிறார்.

அடுத்ததாக, இந்த மாபெரும் சுவிசேஷத்தை நாம் மற்றவர் களுக்கு அறிவிக்கும் போது கர்த்தர் நம்மோடிருக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகமெங்கும் அறி வித்து அவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தும்போது நாம் அவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறுகிறோம். அதுமட்டுமல்ல, நாம் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றப் பாடுபடும்போது உலகத்தின் முடிவி பரியந்தம் சகல நாட்களிலும் அவர் நம்மோடு கூட இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! (மத்தேயு 28:20). இந்த ஆசீர்வாதங்களை இழக்காமல் இவ்வருடத்தில் நம்மைக் காத்துக்கொள்வோம்! ஆமென்!! ●

சிறுவர் பகுதி

# எரிகோவின் மதில்கள்

சகோ. ஏபில் நாயகம்

பிரியமான சிறுபிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். அனைவரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். இப்புதிய வருடம் உங்களுக்கு எல்லா விதத்திலும் ஆசீர்வாதமான ஆண்டாக இருக்க வாழ்த்துகிறேன். புதிய ஆண்டைத் துவங்கும் சிறுவர்களாகிய நமக்குத் தேவையான உற்சாகம் கொடுக்கும் பாடத்தை இந்த மாதம் கற்றுக்கொள்வோம்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் வாக்களித்த கானான் தேசத்தை சுதந்தரிக்கப் போகும் வழியில் எரிகோ என்ற பட்டணத்தை தோற்கடிக்க வேண்டியதாயிருந்தது. தேவன் மோசேயின் மரணத்திற்கு பிறகு யோசுலாவை ஜனங்களுக்கு தலைவனாக நியமித்தார். அவனிடம் தேவன் எரிகோ பட்டணத்தை நீங்கள் தோற்கடிப்பீர்கள் என்று கூறினார் (யோசுலா 6:2). ஆனால், அவர்கள் என்ன என்ன செய்தால். அந்தப் பட்டணத்தை முற்றுகையிட்டுத் தோற்கடிக்க முடியும் என்று சில கட்டளைகளை கொடுத்தார். யோசுவா 6:3 - 5 உள்ள வசனங்களில் அந்த கட்டளைகளை தேவன் யோசுவாவுக்கு தந்தார்.

1. யுத்த புருஷர் அனைவரும் பட்டணத்தைச் சூழ்ந்து ஆறு நாட்களுக்கு சுற்றிவரவேண்டும்.

2. ஏழு ஆசாரியர் உடன்படிக்கை பெட்டிக்கு முன் ஏழு கொம்பு எக்காளங்களை பிடித்துக்கொண்டு போக வேண்டும்.

3. ஏழாம் நாளில் ஏழுதரம் நகரத்தை சுற்றி வர வேண்டும்

இது தான் தேவன் கொடுத்த கட்டளை. இதைச் செய்யும் பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழும் என்று தேவன் வாக்களித்தார். சரி நடந்தது என்ன?

தேவன் கட்டளையிட்ட பிரகாரம் யோசுவாவும் இஸ்ரவேல் ஜனங்களும் செய்தார்கள். தேவன் சொன்னது போலவே நகரத்தை 13 முறை சுற்றி வந்தார்கள். ஜனங்கள் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கையில் அலங்கம் இடிந்து விழுந்தது. பட்டணம் இவர்கள் வசம் வந்தது. தேவன் வெற்றி தந்தார்.

இதிலிருந்து நமக்கு கிடைக்கும் பாடம் என்ன? இந்த வருடம் நமக்கு முன்பாக ஒரு எரிகோலின் அலங்கம் போல் நின்று கொண் டிருக்கலாம். இந்த ஆண்டை எப்படி நாம் எதிர்கொள்ளப்போகிறோம் என்ற பயம் இருக்கும். ஆனால் பிள்ளைகளே! நாம் பயப்படத் தேவையில்லை. ஏனென்றால், தேவன் நம்மோடு இருக்கிறார். ஆனால் அவர் எதிர்பார்க்கும் காரியம், நாம் அவருடைய கட்டளைகளுக்குச் செவிகொடுக்க வேண்டும் என்பது. அப்படி செவிகொடுத்து கீழ்ப் படிந்து நடந்தால் யோசுவாவோடு இருந்த தேவன், நம்மோடும் இருப்பார். இந்த ஆண்டை தேவனின் துணையோடு நாம் வெற்றி ஆண்டாக மாற்றிக் கொள்ள முடியும்.

'' நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை; உன்னை கைவிடுவதுமில்லை; பலங்கொண்டு திடமனதாயிரு '' ( யோசுவா 1:5,6 ) என்று சொன்ன தேவன் உங்களோடிப்பாராக!

## நாளும், நடப்பும்

1. தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கான தடையை நீக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு.
2. தமிழக அரசு அவசரச் சட்டம் கொண்டு வந்தால் மத்திய அரசு ஆதரிக்குமாம் – மத்திய அமைச்சர்.
3. 2022 – ம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை சீனாவை விட அதிகமாகும் – ஐ. நா.
4. எத்தகைய அதிரடி நடவடிக்கைக்கும் இந்திய ராணுவம் தயார் – தலைமைத் தளபதி.
5. முழுமையான தொடக்கக் கல்வி அளிக்கும் முதல் மாநிலம் கேரளம் – துணை ஜனாதிபதி.
6. பயங்கரவாதத் தலைவர். மசூத் அசார் கைது – பாகிஸ்தான்.

மருத்துவ குறிப்பு

# பன்றிக்காய்ச்சல்
# ( H1N1 )



பன்றிக் காய்ச்சல் எனப்படும் இன்ஃப்ளுயன்சா வைரஸ் காய்ச்சல், (H1N1) என்ற வைரஸ் கிருமியினால் ஏற்படுகிறது.

**பன்றிகளிடம் இருந்து மனிதர்களுக்கு ஏற்படுகிறதா?**

இல்லை, சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் இந்த நோய் பன்றிகளி டையே காணப்பட்டது. அதனால் பன்றிக் காய்ச்சல் எனப் பெயர் பெற்றது. ஆனால், இப்போது இது பாதிக்கப்பட்ட மனிதரிடமிருந்து மட்டுமே பரவுகிறது.

**அறிகுறிகள் என்ன?**

சளி, இருமல், தும்மல், காய்ச்சல், உடல் சோர்வு, தொண்டை வலி இவற்றோடு சிலருக்கு மயக்கம், வாந்தியும் ஏற்படலாம்.

**எப்படிப் பரவுகிறது?**

இந்நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் இரும்மும் போதும், தும்மும் போதும் கிருமிகள் வெளியேறி காற்றின் வழியாகப் பரவுகிறது. அப்படிப் பரவும் கிருமிகள் பொருட்களின் மீதும், மேஜை போன்றவைகளின் மீதும் தங்கிவிடும். மற்றவர்கள் இவைகளைத் தொடும் போது தொற்றிக் கொள்ளும்.

**எப்படி தடுப்பது?**

- கைகளை அடிக்கடி சோப்பு பயன்படுத்தி கழுவ வேண்டும்
- கை கழுவாமல் உணவு அருந்துதல் கூடாது
- பாதிக்கப்பட்டவரிடமிருந்து சற்று தூரமாகவே இருக்க வேண்டும்.

**மருந்து இருக்கிறதா ?**

- பயப்படவேண்டாம் நோய் குணமாகவும், நோய் எதிர்ப்பு சிகிச்சைக்கும் மருந்து உள்ளது. இதற்காக தடுப்பூசியும் இருக்கிறது. ஏற்ற நேரத்தில் மருத்துவரை ஆலோசிக்க வேண்டும்.
- கைகழுவும் பழக்கத்தினால் மட்டுமே இந்த நோய் வராமல் 80% நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

Dr. ஏபில் நாயகம்

# இயேசு ஞானஸ்நானம் பெற்றது ஏன்?

## மத் 3:13-15;21:23-27

சகோ. E.Z. செல்வநாயகம்

**பே**தையை ஞானியாக்கும் தேவனுடைய வேதத்தின் புதிய ஏற்பாட்டுப் பிரிவில் முதல் புத்தகமாய் அமையப் பெற்றிருக்கும் மத்தேயு நற்செய்தி நூலில், இயேசுவின் திருமுழுக்கைப் பற்றி இப்படி எழுதப்பட்டிருக்கிறது. '' அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்கு தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க. நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக: இப்பொழுது இடங்கொடு. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான் '' (மத் 3:13-15).

இயேசு ஞானஸ்நானம் பெற்றது ஏன்? பாவம் அவரிடம் இருந்தால் அவை மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பெற்றாரா? ஞானஸ்நானமானது பாவ மன்னிப்புக்கென்று வேதாகமம் விளக்குகிறது ( அப்2:38,22:16 ) இயேசு இப்படியாய் இன்மொழி கூறுகிறார். ''**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்**'' ( மாற் 16:16 ) ஆதி திருச்சபையின் முதல் பிரசங்கத்தை முழங்கிய பேதுரு. தனது முதல் நிருபத்தில் ''அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது. இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது'' என்கிறார் ( I பேதுரு 3:21 ).

வேதாகமம் இயேசுவைப் பற்றிக் கூறுகையில் '' அவர் பாவம் அறியாதிருந்தார் '' என்கிறது. மறுதலித்து பின்பு மனங்கசந்து அழுது மனந்திரும்பிய பேதுரு கூறுகையில், ''**அவர் பாவஞ்செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை**'' என்கிறார் (I பேது 2:22 ) எபிரெய எழுத்தாளர் '' எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதராயிருந்தார்'' என்கிறார் (எபி 4:15) பாவம் அவரிடம் காணப்பட்டதால் அது மன்னிக்கப்பட வேண்டும்

என்பதற்காக திருமுழுக்குப் பெற்றிருந்தால் அவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறியிருக்கிறார் என்றுதானே அர்த்தமாகிறது (I யோ 3:4 ) ஆனால் இயேசு '' ... **பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்**'' என்றார் ( யோ 8:29 ). நமதாண்டவர் பாவஞ்செய்திருப்பார் என்றால் அவருக்கே இரட்சகர் தேவையாயிருந்திருக்கும். இரட்சகர் தேவைப்படுகிறன்ற ஒருவர் மற்றவர்களை இரட்சிக்கும் இரட்சகராக இருக்க முடியாது.

யோவானிடம் ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? என்ற கேள்விக்கு இயேசுவே காரணத்தைத் தருகிறார். ''எல்லா நீதியையும் நிறை வேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது'' என்று. '' **நிறைவேற்ற**'' என் கிற வார்த்தைக்கு **நிரப்புதல்** அல்லது **முழுமைப்படுத்துதல்** என்று அர்த்தம். இதே வார்த்தையை மோசேயின் நியாயப்பிரமாணத்தை குறிப்பிட்டு பேசுகையில் அதை **நிறைவேற்றவே** அதில் வந்தேன் என்று பயன்படுத்தினார்.

கீழ்ப்படிதல் என்பது பற்றி எழுதுகையில் I யோ 3:7 ம் வசனத் தில் யோவான் '' நீதியை '' என்ற வார்த்தை பயன்படுத்துகிறார் '' ..... நீதியைச் செய்கிறவன் நீதியுள்ளவனாயிருக்கிறான் '' தேவனிடம் தன் உறவை சீராய் அல்லது நீதியாய் வைக்கிற உள்ளான குணாதிசயத்தை அது குறிக்கிறது. இயேசு இந்தத் தன்மையை நிறைவேற்றினாரா. ஏசா யா தீர்க்கன் தீர்க்கமாய் கூறுகிறார். அவர் நமது ஆண்டவரின் மரணத் தைப் பற்றி எழுதுகையில் '' **அவர் தம ஆத்தும வருததகின பலனைக் கண்டு திருப்தியாவார்: என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்துகொள்வார்** '' ( ஏசா 53:11 ) என்கி றார். தமது மரணத்தை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில் '' ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டு போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது... இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்'' ( 2 தீமோ 4:6-8 ) அத்தேனே பட்டனத்தில் பவுல் பிரசங்கிக்கையில் ''பூலோகத்தை ( இயேசு ) நீதியாய் நியாயந்தீர்ப்பார்'' என்றார். இதன் மூலம் ஒரு கருத்து தெளிவாய் தெரிகிறது. ஒரு நீதியுள்ள மனிதன் நீதியின் கீரிடத்தை ஒரு நீதியற்றவரிடம் பெற்றுகொள்ள முடியாது என்பது தெளிவாகிறது. யோவான், நமது பாவத்தை நிவிர்த்தி செய்யும் கிறிஸ்துவைப் பற்றி கூறுகையில் '' ... இயேசு கிறிஸ்து நீதிபர

ராயிருகிறார் ... என்றார் ஆகவே மனிதகுலத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்கின்ற கிருபாதாரபலிக்கு உரிய எல்லா தகுதிகளையும் பெற்றிருந்தார். இது இப்புவியில் நம் பரமனின் வாழக்கை நீதியை பிரதிபலிக்கிற ஒன்றாகவே இருந்தது.

மத். 21:23-27 ல் இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார் என்பதற்கு மற்றொரு காரணமும் காணப்படுகிறது. யூதர்களால் பேணி காக்கப்பட்ட தேவ ஆலயத்தில் தேவ குமாரனாகிய இயேசு போதிக்கும் போது அவருடைய போதனைக்கு அடிப்படை அதிகாரம் எங்கிருந்து வந்தது என்கிற கேள்வியை பிரதான ஆசாரியனும், மூப்பர்களும் கேட்டார்கள். சாத்வீகத்தின் உறைவிடமான இயேசு இவர்களின் கேள்விக்கு பதில் தரும் பொருட்டு ஒரு கேள்வியை சாமார்த்தியமாக கேட்கிறார் ''யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று. ( 25 ம் வசனம் ) இப்படி கேட்டதால் இக்கட்டான சூழ்நிலையின் உச்சியில் அவர்களை உட்கார வைத்தார். அது பரத்தில் இருந்து வந்தது என்று பதில் தெரிந்தாலும் அப்படி சொன்னால் இயேசு வைத்த கண்ணியில் சிக்கி விடுவோம் என்று எண்ணி பதில் தெரியாதது போல் பசப்பு நாடகம் ஆடினார்கள்.

இயேசு இந்த ஸ்நானத்தை பெறவில்லை என்றால் சிக்கலின் உச்சியில் இவர் இருந்திருப்பார். அவரின் முகத்தின் நேர் பார்த்து நயவஞ்சகர்கள் '' நறுக் '' என்று கேட்டிருப்பார்கள் '' பரத்தில் இருந்து வந்தால் நீர் ஏன் இதற்கு பணியவில்லை '' என்று அதன் விளைவாக கிறிஸ்துவின் நம்பகத்தன்மை மிகக் குறைந்திருக்கும் என்பதில் மாற்றுகருத்திருக்க முடியாது.

'' கர்த்தரின் கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள் .....'' ( சங் 119:172) என்று பிரதான ஆசாரியனுக்கும். மூப்பர்களுக்கும் தெரிந்திருக்கும். இதனால் தான் இயேசு தம் ஞானஸ்நானம் பற்றி கூறுகையில் '' **எல்லா நீதியையும் நிறைவேற்ற** '' ( மத் 3:15 ) என்றார். தேவனுடைய கற்பனையின்படி செய்தோம் என்றால் அது நம்மை நீதிமானாக்கும். இயேசு கூறினதை மறக்க வேண்டாம் .... பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன் என்றார் ( யோவான் 8:29 )

நாமும் அப்படிப் பிதாவை பிரியப்படுத்தும்விதமாக செயல்படுவோம் !

# நான் ஏன் தேவனை விசுவாசிக்கிறேன்?

Bro. Roy V. Palmer

**ந**டைமுறையில் அநேக ஜனங்கள் தேவனை விசுவாசிக் கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை தேவன் இருக்கிறார் என்பது அவர்கள் இருப்பதைப் போலவே வெளிப்படையான ஒன்றாக இருக்கிறது. தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான் என்று வேதாகமம் சொல்கிறது (சங்கீதம் 53:1). ஒருவர் தேவனை விசுவாசிக்கக் கட்டாயமான காரணங்கள் இருக்கின்றனவா? தேவன் இல்லையென்று எண்ணிக் கொள்வது உண்மையாகவே நியாயமான ஒன்றாக இருக்கிறதா?

முதலாவது, நாம் தேவன்ப் பற்றிப் பேசும் போது என்ன நினைக்கிறோம்? **ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்** என்று வேதாகமம் சொல்கிறது (ஆதியாக மம் 1:1). ஆகவே, தேவன் நம் சிருஷ்டிகராயிருக்கிறார். நீரே அநாதியாய் என் றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் என்று சங்கீதக்காரன் எழுதுகிறார். தேவன் நித்தியமானவர். அவர் எப்போதுமே இருந்தவர். அவர் எப் போதும் இருப்பார். தேவன் நல்லவர். அவருடைய நீதி என்றென் றைக்கும் நிற்கும் (சங்கீதம் 111:3). ஆனால், அவர் நம் நியாயாதிப தியும் நமக்கு பிரமாணத்தைத் தந்தவருமாயிருக்கிறார். கர்த்தர் ஞான முள்ள தேவன்; அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ? கர்த்தர் பூமி யின் கடையந்தரங்களை நியாயந்தீர்க்கிறவர் (1சாமுவேல் 2:3,10).

கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார் (ஏசாயா 33:22). தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). தேவன் ஒளியாயிருக்கிறார் (1யோவான் 1:5). தேவன் அன்பாகவே இருக்கிறார் (1யோவான் 4:16).

ஆனால், தேவன் என்று அழைக்கப்படுகின்ற சிருஷ்டிகர், நித்தியமானவர், சர்வவல்லவர், நீதியுள்ளவர் இருக்கிறார் என்பதை ஒருவர் ஏன் விசுவாசிக்க வேண்டும்? நாம் வாழ்கின்ற இந்த பிரபஞ்சம், சிருஷ்டிப்பு போன்றவைகள் தேவன் இருக்கி றார் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் எப்போதுமே இருந்து வருவது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இல்லையென்றால் ஒன்றுமே இல்லாத நேரத்தில் ஏதோ ஒன்று (உலகம்,

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுதல்

Bro. பாஸ்கர்

**அ**ன்பார்ந்த வாசகர்களே ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்த மாகுதல் குறித்து இம் மாதம் படித்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாவோம்.

I. **உவமை**

அப்பொழுது பரலோக ராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப் பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும் அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமா யிருந்தார்கள். புத்தி யில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக் கொண்டுபோனார்கள் எண்ணெயையோ கூடக் கொண்டு போக வில்லை புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங் கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெ யையும் கொண்டு போனார்கள். மணவா ளன் வருகிறர் அவருக்கு எதிர் கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப் பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லாம் எழுந்திருந்து தங்கள் தீவட்டி களை ஆயத்தப்படுத்தி னார்கள். புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ள வர்களை நோக்கி உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள். எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதே என்றார்கள். புத்தியுள்ளவார்கள் பிரதியுத்தரமாக : அப்படியல்ல எங்களுக்கும் உங்க ளுக்கும் பேறாம லிராதபடி நீங்கள் விற்கிறவர்கலிடத்திற்கு போல் உங்களுகங்கும் வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள் அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார் ஆயத்த மாயிருந்தவார்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவே சித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது. பின்பு மற்றக் கன்னிகைகலும் வந்து ஆண்ட வரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள். அதற்கு அவர் உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்க ளுக்கம் சொல்லுகிறேன் என்றர். மனிதகுமாரன் வரும் நாளையாவது

மனிதன், மற்றும் இன்று உலகில் இருப் பவைகள் எல்லாம்) ஒன்றுமில் லாமையில் இருந்து தான் வந்திருக்க வேண்டும் என்றாகிவிடும். ஆனால், எந்த மனித அனுபவமோ, மனித விளக்கமோ ஒன்றுமில்லா மையில் இருந்து ஏதோ ஒன்று வந்தது என்று ஒத்துக்கொள்ளாது.

தேவனை விசுவாசிப்பதற்கான இரண்டாவது காரணம், உலகத்திலும், பிரபஞ்சத்திலும் காணப்படும் ஒழுங்கு மற்றும் அமைப்பு போன்ற உண்மைதான். ஒழுங்கு இருப்பது மறுக்க முடியாதது. பூமி, சந்திரன், சூரியன் மற்றும் பிரபஞ்சத்திலுள்ள எண்ணற்ற அமைப்புகள் ஆச்சரியமானவைகள். இவைகளின் துல்லியத்தைப் பொறுத்தவரை எந்தக் கடிகாரத்தையும் இதனுடன் ஒப்பிட முடியாது. ஓர் அருமையான கடிகாரத்தின் சிக்கலான பாகங்கள் தானாகவே உருவாகி, தானாகவே ஒழுங்குபடுத்தப்பட்டு, அதை உண்டாக்கினவர் இல்லாமல் அது வேலை செய்வதை கற்பனை செய்து பார்க்க முடியுமா? அது போலத்தான் இந்த ஆச்சரியமான பிரபஞ்சம். இயற்கையின் ஆச்சரியமூட்டும் செய்முறைகள், இயற்கை விதிகளின் அற்புத செயல்பாடுகள் போன்றவை ஒரு சிருஷ்டிகர் இல்லாமல் இவைகளெல்லாம் தற்செயலாக ஏற்பட்டு, தானாகவே நீடித்திருந்திருக்கிறதென்பதைக் கற்பனை செய்து பார்க்க முடியாது.

தேவனை விசுவாசிப்பதற்கான மற்றுமொரு காரணம், மனிதனில் இருக்கும் ஒழுக்க ரீதியிலான உணர்வுதான். எதுசரி, எது தவறு எனப் பகுத்தறியும் திறமை கீழான மிருகங்களிடம் இல்லை. இது கலாச்சாரத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், அறிவுள்ளவர்கள், அறிவில்லாதவர்களிடையே வேறுபட்டாலும் இது உலகெங்கும் காணப்படக்கூடிய ஓர் உண்மை தான். சில தனிப் பட்ட நபர்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தாலும் கூட, எவ்வித சந்தேகமுமின்றி மனிதனுக்குள் ஓர் உலகளாவிய மனச்சாட்சி இருக்கிறது. அது ஒழுக்க ரீதியிலான பிரமாணத்தை கட்டாயப்படுத்துகிறது. அதோடு அந்த பிரமாணத்தைக் கொடுப்பவர் இருக்கிறார் என்று சாட்சி பகர்கிறது.

இந்த உலகம் இருப்பதற்கு இதை உண்டாக்குவதற்கு வல்லமைப் பெற்ற ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் அவசியப்படுகிறார். இவையனைத்தையும் உருவாக்கத்தக்க விவேகமுள்ள ஒருவர் அவசியப் படுகிறார். அதைப் போலவே ஒழுங்கு, அமைப்பு, உணர்வு, மனச்சாட்சி போன்றவைகளை நோக்கப்படுத்தி அதை மனிதனுடைய சுபாவத்தின் மீதும், இயற்கையின் மீது விதிப்பதற்கு திறன் பெற்ற ஒருவர் அவசி யப்படுகிறார். அவர் தான் **தேவன்** என்று வேதாகமம் போதிக்கிறது. **இதுவரை கற்பனை செய்த அல்லது உருவாக்கப்பட்ட காரண காரியங்க ளைக் காட்டிலும் வேதாகம பதில் தான் அதிக நியாயமானது.**

**நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் (மத் 25:1-13)**

II. ***உவமையின் விளக்கம்***

பரலோக ராஜ்யம் என்பது தேவனுடைய ராஜ்யம் (மத் 19:23 :24) தேவனுடைய ராஜ்யம் என்பது கிறிஸ்துவின் ராஜ்யம் (எபே 5:5) கிறிஸ்துவின் ராஜ்யம் என்பது கிறிஸ்துவின் சபை (ரோமன் 16:16) தீவட்டி என்பது ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொள்ளுதல் (2 கொரி 11.2) கிறிஸ்துவின் சபைகளில் புத்தியுள்ளவர்களிலும் புத்தியில்லாத வர்களும் இருப்பார்கள். எண்ணெய் என்பது விசுவாசம் (எப் 11.6) மனவாளன் வருகை கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (மத் 25: 13) தூங்குதல் ஆவிக்குரிய வாழ்வில் அனலுமின்றி குளிருமின்றி வாழுதல் (வெளி 3;16) கதவு அடைக்கப்படும் வேத சபையின் கதவு இப்போது திறந்திருக்கிறது (அப் 2:41) ஒருநாளில் சபையின் கதவு அடைக்கப்படும் வேளை வரும். கிறிஸ்துவின் வருகையின்போது கதவு அடைக்கப்படும் தேவன் நோவா காலத்தில் பேழையின் கதவை வெள்ளம் வரும்போது அடைத்தார். (அது போல கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இரட்சிப்பின் கதவை சபையின் கதவை அடைப்பார் என்பது நிச்சயம். அப்போது ஆண்டவரே எங்களுக்கு திறக்க வேண்டும் என்றால் அவர் உங்களை அறியேன் என்பார்(மத் 7:21-25:12) ஆயத்தம் என்பது தயாராகுதல்.

III. ***கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தமாகுதல்***

இந்தப்புத்தாண்டிலே நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக் காக ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர் எப்பொழுது வருவார் என்று அறியாதிருக்கிறபடியால் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும் ஆயத்தமாகுதலில் இரண்டு வகை உள்ளது. 1. உள்ளான ஆயத்தம் 2. புறம்பான ஆயத்தம் என்று இரண்டு வகைப்படும். உள்ளான ஆயத்தம் என்பது விசுவாசம். விசுவாசம் எப்பொழுதும் கொழுந்து விட்டு எரிய வேண்டும். பிரகாசிக்க வேண்டும் கற்புள்ள கன்னிகையாக ஒருபுருஷனுக்கு நியமிக்கப்பட்ட மணவாட்டியாகக் காத்திருக்க வேண்டும் (வெளி 21:9) பல உபதேசங்களால் இழுக்கப் பட்டு பல சபைகளில் ஐக்கியம் வைத்துக்கொண்டு இருக்கிறவர்கள் ஆவிக்குரிய விபச்சாரம் செய்கிறவர்களாக இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் தண்டனையை பெற்றுக் கொள்வது நிச்சயம்(வெளி 2:22,23) புறம்பான ஆயத்தம் என்பது நாம் மற்றவர்களுக்கு முன்பாக

முன் மாதிரியாக நடக்க வேண்டும் நீ தேவாலயத்துக்கப் போகும் போது உன் நடையைக் காத்துக் கொள் (பிர. 5:1) நம் நடையை காத்துக்கொள்ள வேண்டும். உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாத படிக்கு நீ வார்த்தையிலும், நடக்கை யிலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசி களுக்கு மாதிரியாயிரு என்றார். (1.தீமோ 4:12) இப்படிப்பட்ட இரண்டு வித ஆயத்தத் தோடு முதலாவது தேவனுடைய ராஜ் யத்தையும் அவருடைய நீதியையும் தேடுவாயானால் கிறிஸ்து உனக்கு ஜீவ கிரீடத்தைக் கொடுப்பார் (வெளி 2:10)

IV. **கதவு அடைக்கப்படும் வேளை**

கதவு என்பது புதிய ஏற்பாட்டில் வாய்ப்புகள் என்தாகும் இப்போது இரட்சிக்கப்படுவதற்கான அநுகூலமான கதவு திறக்கப்பட்டி ருக்கிறது (1 கொரி 16:9) கர்த்தரே சபையின் கதவைத் திறந்து வைத்தி ருக்கிறார் (2 கொரி 2:12,வெளி 3:20)அது அடைக்கப்படும் வேளை வரும். கிறிஸ்து வந்து அடைத்து விடுவார்(மத் 25:10) வாய்ப்புகளை எல்லாம் விட்டுக் கடைசி வேளையில் ஆண்டவரே, ஆண்டவரே எங்க ளுக்குத் திறக்க வேண்டும் என்றால் அதற்கு அவர் உங்களை அறியேன் என்பார் (மத் 25:11,12) எனவே விசுவாசத்தில் தூங்குகிற நீ மரித் தோரை விட்டு எழுந்திரு. கிரியை உள்ள விசுவாசமே உதவும் கிரியை யில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது ( யாக் 2:20) கதவு அடை படும் வேளையில் அதாவது, கிறிஸ்துவின் வருகையின் போது கிரியை யில்லாத விசுவாசம் உதவாது. எனக்கு இப்போது தேவன் இரட்சிப்பின் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார் என்பதை உணர்ந்து வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வோம். இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துக்குள் இருந்தால் அவன் புதிய சிருஷ்டியாயிருக்கிறான் (2.கொரி 5:17) இந்த புதிய ஆண்டு கர்த்தர் நமக்குச் கொடுத்த அநுகூலமான கதவைத் திறந்து வைத்துள்ளார் புது மனிதனாக மாறுவோம்.

-தொடரும்

## வேதாகம பாலஸ்தீனா நாட்டின் எல்லைகள்

வடக்கே : லீபனோன் மலைத்தொடரும், எர்மோன் மலையும்

மேற்கே : மத்திய தரைக்கடலின் கீழ்ப்பகுதியாகிய பெருங்கடல்

தெற்கே : இதுமேயா என்ற நாடு

கிழக்கே : அரேபியா பாலைவனம்

# நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

Bro. Clyton Pepper

தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். அந்நாளில் தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத் தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்க ளெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும் போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (II தெச. 1:7-10).

சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத ஒருவர் நித்திய அழிவில் இழந்து போகிறபடியால் சுவிசேஷம் என்றால் என்ன? அதற்கு எப்படி கீழ்ப்படிவது என்கின்ற கேள்வி எழுகிறது.

**சுவிசேஷம் என்றால் என்ன?**

அப்போஸ்தலனாகிய பவுல் இதற்கான விடையைக் கொடுக்கிறார். அன்றியும், சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத் தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால்; அதி னாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்க ளின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1கொரி. 15:1-4). ஏசாயா 53 ஆம் அதிகாரத்தை பார்க்கவும்.

நாம் பாவம் செய்ததினால் நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனையைக் கிறிஸ்து அவராகவே முன்வந்து அந்தத் தண்டனையை

ஏற்றுக் கொண்டார். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23).

**சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது அவ்வளவு அவசரமானதா?**

ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்ற தீர்மானத்தைத் தள்ளிப்போடக்கூடாது என்பதற்கான இரண்டு காரணங்களை நாம் இப்போது காணலாம் :

1. வாழ்க்கையின் நிச்சயமற்றத் தன்மை : நாம் வாழும் வாழ்க்கை நிரந்தரமல்ல என்று அனுதினமும் நினைவுபடுத்தப்படுகிறோம். எதிர்பாராத நேரங்களில் பெரும்பாலும் வியாதி, விபத்து போன்றவைகள் மரணத்தைக் கொண்டு வருகின்றன. எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொல்கிறார். **அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது** (எபிரெயர் 9:27) என்று.
2. எதிர்பாராத விதத்தில் கிறிஸ்துவின் வருகை : கிறிஸ்து எதிர்பாராத நேரத்தில் வருவார் என்று வேதாகமம் போதிக்கிறது. அவருடைய வருகை இரவிலே திருடன் வருகிறவிதமாய் இருக்கும் (1தெச. 5:2). இது எப்போது சம்பவிக்கும் என்று யாருக்கும் தெரியாது.

**சுவிசேஷம் புரட்டப்படுகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்:**

சிலர் சுவிசேஷத்தைப் புரட்டுவார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரித்திருந்தார். வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (கலா. 1:8).

**யார் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்?**

1. மறுபடியும் பிறக்க விரும்புகிற யாவரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் (யோ 3:3-5). சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாததினால் இழந்துபோன யாவரும் இரட்சிக்கப்பட இப்படிச் செய்ய வேண்டும். ஒருவர் கிறிஸ்துவை மனதளவில் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வது போதுமானதல்ல. அது சுவிசேஷத்திற்கு இன்னும் கீழ்ப்படியவில்லை என்ற குறையை வைக்கிறது.
2. தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப் படிய வேண்டும். உண்மையான ஞானஸ்நானமானது தண்ணீரில்

அடக்கம் பண்ணப்படுதலாகும் (ரோமர் 3:7) (கொலோ 2:12; யோ. 3:23). போதிக்கப்படத்தக்கவர்கள்; சுவிசேஷத்தை புரிந்து கொள்ளக்கூடியவர்கள் மாத்திரமே அதற்கு கீழப்படிய வேண்டும். வேத வசனங்களின் அடிப்படையில் தெளிப்பு ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள் ஞானஸ்நானம் பெறவில்லை.

3. கிறிஸ்துவைத் தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளவும், பாவிகளுடைய ஜெபத்தை செய்யும்படியாக சொல்லப்பட்டவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்: இந்தச் செயல் (லூக்கா 18:9 -14) வசனங்களில் நாம் பார்க்கும் ஆயக்காரன், பரிசேயன் சம்பவத்தை அடிப்படையாக வைத்து தவறான முறையில் போதிக்கப்படுவதாகும். இந்த சம்பவமானது நாம் சுயநீதியுடையவர்களாய் இருக்கக்கூடாது. மாறாக, தாழ்மை மனப்பான்மையை கொண்டிருக்க வேண்டும் என்று நமக்கு போதிக்கிறது. ஒருவர் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்று இது சொல்லவில்லை. ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவர் இரட்சிக்கப்படமுடியும் என்று போதிப்பவர்கள் எல்லாம் ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமலே இரட்சிக்கப்பட முடியும் என்று போதிப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

4. ஜெபத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டுவிட்டீர்கள் என்று போதிக்கப்பட்டவர்களெல்லாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.

கிறிஸ்தவர்கள் பாவம் செய்யும்போது ஜெபிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள் (யாக்கோபு 5:16; அப். 8:22). ஆயினும், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத ஒருவர் பாவமன்னிப்பிற்காக ஜெபிக்க வேண்டும் என்று கிறிஸ்துவாலோ அல்லது அவருடைய அப்போஸ்தலர்களாலோ கட்டளை கொடுக்கப்படவில்லை. ஒரு பாவி தேவனுக்கு கீழ்ப்படியும் போதுதான் பாவமன்னிப்பை பெறுகிறார். இரட்சிக்கப்படுவதற்காக அவர் செய்த ஜெபத்தினால் பாவமன்னிப்பை பெறுவதில்லை.

நிச்சயமாகவே, நம்முடைய கர்த்தர் கட்டளையிட்டபடியே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. இல்லையென்றால், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவோம் (II தெச. 1:10).

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவோம்.

*ஊழியர்களின் கனிவான கவனத்திற்கு ...*


தேர்ந்த தேவமனிதர்களால் எழுதப்பட்டு, சர்வதேச தரத்தில் வெளிவரும் சத்தியத்தின் குரல் (The Voice of Truth) காலாண்டு மாத இதழ் தேவையிருப்போர் உங்கள் தெளிவான முகவரியுடன் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

தனிப்பிரதியாகவும், கூடுதல் பிரதிகளாகவும், பயனுள்ள தேவைக்கேற்ப அனுப்பிக் கொடுப்போம்.

எங்கள் அனைத்து வகை ஊழியங்களுக்காக இப்புதிய ஆண்டிலும் தொடர்ந்து ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

– ஆசிரியர்

*எங்களிடம் உங்கள் தேவைக்கான பாடல் புத்தகங்கள் உண்டு*



மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு தேர்ந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட பாட்டுப் புத்தகம் வேண்டுவோர் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில குறும்பாடல்கள்**

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஏன் நாங்கள் கர்த்தருடைய... | 11 |
| 3. பெண்கள் பகுதி | 15 |
| 4. வாலிபர் பகுதி | 18 |
| 5. சிறுவர் பகுதி | 21 |
| 6. மருத்துவக் குறிப்பு | 23 |
| 7. இயேசு ஞானஸ்நானம்... | 24 |
| 8. நான் ஏன் தேவனை விசுவாசிக்கிறேன் | 27 |
| 9. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை | 29 |
| 10. நாம் என்ன செய்ய வேண்டும் ... | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.



12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.



## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV
Monday 7:00 - 7:15 am
Thursday 9:30 - 10:00 pm
Saturday 7:15 - 7:30 am

Arjunan In Tamil
TV : Every Monday 7.30 pm and
Every Saturday 7.30 pm on Tamilan TV
Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam:
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley in Tamil:
Tamilan TV : Sunday 6:45 - 7:00 pm
PudhuYugam TV : Tuesday 6:15 - 6:30 am

P.R. Swamy & Douglas:
Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm
on 25 And 49 Meter bend of Sri Lankan Radio

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

தனிப்பிரதி ரூ.10/-

மலர் - 29 இதழ் - 1 ஜனவரி 2016

Annual Subscription Rs.100/-

பிரியமானவனே ! உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் ! (III யோவான் 2)

2016

எங்களது இதர வெளியீடுகள்

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017



சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும். – ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor. S. Rajanayagam.